செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 372 நாள்: 23-6-2

# அனைவருக்கும் கல்வி இயக்கம்
## வேலூர் மாவட்டம்

### பத்திரிக்கைச் செய்தி

### மாற்றுத் திறனுடைய குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம்

வேலூர் மாவட்டம், அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பாக ஜுன் 23 வேலூர் நகரம் வட்டார வள மையத்தில் 6 முதல் 18 வயது வரை உள்ள மாற்றுத் திறனுடைய குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் அரசு முஸ்லீம் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இம்முகாமை வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப அவர்கள் தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில் முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட உதவி திட்ட அலுவலர், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் வேலூர் நகரம், ஆகியோர்கள் இம்முகாமிற்கு முன்னிலை வகித்தனர். வேலூர் நகர வட்டார வள மைய மேற்பார்வையாளர் (பொ) அவர்கள் அனைவரையும் வரவேற்றார். மேலும், முகாமிற்கான ஏற்பாடுகளை உள்ளடங்கிய கல்வியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்கள் செய்திருந்தார்.

வேலூர் மாவட்ட இணை இயக்குநர், சுகாதாரத்துறை, வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் ஆகியோரின் தலைமையிலான எலும்பு முறிவு அறுவைச் சிகிச்சை, கண் சிறப்பு பிரிவு, காது, மூக்கு, தொண்டை சிறப்புப் பிரிவு, மனநலப் பிரிவு, குழந்தைகள் நலப் பிரிவு ஆகிய மருத்துவக் குழுவினரின் பரிந்துரையின்படி மொத்தம் 135 மாற்றுத் திறனுடைய குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

இந்நிகழ்ச்சியினை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், வேலூர் நகரம் ஆசிரியர் பயிற்றுநர்கள், சிறப்பாசிரியார்கள் மற்றும் இதர வட்டார வளமைய சிறப்பாசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டு முகாம் சிறப்பாக நடைபெற உறுதுணையாக செயல்பட்டனர்.

இதுபோன்று இம்முகாமானது 21 வட்டார வள மையங்களிலும் 23.06.2017 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, திருப்பத்தூர் 27.06.2017 – ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, தொரப்பாடி, வட்டார வள மையம் நெமிலி, 28.06.2017 அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திமிரி, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கந்திலி, 29.06.2017 – அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஆற்காடு, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, அரக்கோணம், 30.06.2017 – நகராட்சி மேல்நிலைப்பள்ளி, குடியாத்தம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சோலையார்பேட்டை, 01.07.2017 – அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, காவேரிப்பாக்கம், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கே.வி.குப்பம், 03.07.2017 – அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, காட்பாடி, ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, நாட்றம்பள்ளி, 04.07.2017 – ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, கணியம்பாடி, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சோளிங்கர், 05.07.2017 – அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அணைக்கட்டு, இந்து பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஆம்பூர், 06.07.2017 – அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, இராணிப்பேட்டை, 07.07.2017 – ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சின்னவரிகம், பேர்ணாம்பட்டு, 08.07.2017 – அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, வாலாஜா, 10.07.2017 – அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, ஆலங்காயம் மேற்கண்ட தேதிகளின்படி நடைபெறும் மருத்துவ முகாம்களில் அனைத்து மாற்றுத் திறனுடைய குழந்தைகளும் கலந்துக் கொண்டு பயனடையச் செய்யுமாறு வேலூர் மாவட்ட ஆட்சியர் அறிவித்தார்.

செ.ம.தொ.அ. 23/6/17
வேலூர்-9.